This Question Paper consists of 45 questions and 12 printed pages.

12 பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் 45 வினாக்கள் உள்ளன.

Roll No.
ரோல் நம்பர்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

Code No.
கோட் நம்பர் **68/SS/O/TM**

SET **A**

# தமிழ்

# (TAMIL)

# (304)

Day and Date of Examination : ____________________

(தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி)

Signature of Invigilators : 1. ____________________

(தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம்) 2. ____________________

---

**பொதுக் குறிப்புகள் :**

1. தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை (Roll No.) வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.

2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும், வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும், மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும், அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.

3. வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.

4. உங்களது வினாத்தாளின் Code எண் **68/SS/O/TM-A** விடைத்தாளில் எழுதுங்கள்.



Unnati Educations
9899436384, 9654279279

# தமிழ்
# (TAMIL)
# (304)

கால அளவு : 3 மணி நேரம் ] [ மொ. மதிப்பெண் : 100

**NOTE :**

(1) Answers of all questions are to be given in the Answer-Book given to you.

(2) 15 minutes time has been allotted to read this question paper. The question paper will be distributed at 02.15 p.m. From 02.15 p.m. to 02.30 p.m., the students will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

## பகுதி - அ

### பிரிவு-அ : தேர்ந்தெடுக்கப்பட்ட பாடப்பகுதி

**(5 மதிப்பெண் செய்யுள் + 9 மதிப்பெண் உரைநடை = 14 மதிப்பெண்)** **மதிப்பெண்**

**1.** பாட்டும் தொகையும் என அழைக்கப்பெறுவது எது ? **1**

**2.** இறைவன் ஆடிடும் கூத்தின் பெயர் என்ன ? **1**

**3.** (அ) தமிழ் உயிரினும் மேலானது என்று கூறியவர் யார் ? **1**

**அல்லது**

(ஆ) ஆதன் அவினி எந்நாட்டு மன்னர் ?

**4.** (அ) நல்ல எனும் அடைமொழியோடு சிறப்பிக்கப் பெறும் நூல் எது ? **1**

**அல்லது**

(ஆ) ஓரை என்றால் என்ன ?

**5.** (அ) யுத்தம் எவ்வாறு வருகிறது ? **1**

**அல்லது**

(ஆ) சிற்றிலக்கியங்கள் எத்தனை வகைப்படும்?



Unnati Educations
9899436384, 9654279279

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும் (வினா எண் 6 - 7) :**

தொன்மை என்பது பழைமை என்கிற பொருள்தரும் சொல்லாகும். உலகில் தொன்மை வாய்ந்த மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்றாகும். மனித இனம் லெமோரியா என்கிற குமரிக்கண்டத்தில் தோன்றியது என்று வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். குமரிக்கண்டத்தில் தோன்றிய மனிதன் பேசிய மொழி தமிழ். தமிழ் வளர்த்த முச்சங்கங்களுள் இடைச்சங்கம் இக்குமரிக்கண்டத்தில்தான் தோன்றியது. முச்சங்க வரலாறுகளை இறையனார் களவியல் உரை என்கிற நூல் கூறுகின்றது. இக்குமரிக்கண்டம் கடலுள் மூழ்கியது. மூன்றாவது சங்கம் இன்றைய மதுரையில் நடந்தது.

இன்றுவரை தமிழில் கிடைத்துள்ள நூற்களுள் முதல் நூலாகத் தொல்காப்பியம் உள்ளது. சுமார் 2500 ஆண்டுகள் பழைமை உடையது. இந்நூலுக்கு முன்பே பல நூல்கள் இருந்தன. இவற்றின் மூலம் தொன்மையுடைய உலகமொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்று என்பதனை அறிகிறோம்.

தமிழ்மொழி உலகின் தொன்மையான மொழியாக விளங்குவதோடு தனித்தன்மை பெற்ற மொழியாக விளங்குகிறது. இம்மொழியில் அமைந்த இலக்கண நூற்களும் இலக்கியப் படைப்புகளும் தனிநோக்கும் போக்கும் உடையன. மொழியின் அமைப்பில் எழுத்து, சொல், தொடர் இலக்கணக்கூறுகளின் அமைப்பை எல்லா மொழிகளிலும் காணலாம். தமிழ்மொழியிலும் இவ்வமைப்புகள் உள்ளன. இவையல்லாமல் தமிழ்மொழியில் வாழ்வியலுக்கு இலக்கணம் கூறும் பொருள் இலக்கணமும் உள்ளது. இவ்விலக்கணப்பகுதி தமிழ்மொழியின் தனித்தன்மையை உணர்த்தும் பகுதியாக அமைந்துள்ளது. வாழ்க்கையை அகம், புறம் என்று வகுத்தனர். தன்னளவில் மகிழ்வதனை அகம் என்றும் புறத்தார்க்குத் தெரிவித்து மகிழ்வதனைப் புறம் என்றும் கூறினர். அகம் என்பது காதல் வாழ்வைக் கூறும் பகுதியாகும். புறம் என்பது கல்வி, கொடை, வீரம், சிறப்புப் போன்ற நிலைகளைக் கூறும் பகுதியாகும்.

**6.** பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டனுக்குச் சரியா, தவறா எனக் கண்டறிக: **1x2=2**

(I) முச்சங்கங்களுள் இடைச்சங்கம் குமரிக்கண்டத்தில் இருந்தது.

(II) மூன்றாவது தமிழ்ச்சங்கம் சென்னையில் இயங்கியது.

(III) முச்சங்க வரலாற்றினைத் தொல்காப்பியம் தெரிவிக்கிறது.

**7.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : **1x1=1**

(I) அகம் என்பது எதைக் கூறும் பகுதியாகும் ?

(அ) வீரம் (ஆ) காதல் (இ) கல்வி (ஈ) கொடை

**8.** பொருத்துக : **1x4=4**

| | | |
|---|---|---|
| (அ) அழகின் சிரிப்பு | - | கி. ராஜநாராயணன் |
| (ஆ) தொல்காப்பியம் | - | திருத்தக்கத்தேவர் |
| (இ) கதவு | - | பாரதிதாசன் |
| (ஈ) சீவகசிந்தாமணி | - | தொன்மை நூல் |



Unnati Educations
9899436384, 9654279279

9. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **1x2=2**

(I) ராசாத்தி தாயைப் பிரிந்து எத்தனை நாட்கள் ஆகின ?

(அ) நான்கு நாட்கள் (ஆ) ஏழு நாட்கள்

(இ) பத்து நாட்கள் (ஈ) மூன்று நாட்கள்

(II) ரங்கம்மாளின் ஊரில் எத்தனை ஆண்டுகளாக மழை பொழியவில்லை ?

(அ) மூன்று ஆண்டுகள் (ஆ) இரண்டு ஆண்டுகள்

(இ) ஆறு ஆண்டுகள் (ஈ) ஐந்து ஆண்டுகள்

## பிரிவு - ஆ

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும் (வினா எண் 10 - 11)**

கடிதம் என்ற சொல்லுக்கு ‘எழுதிய செய்தியுள்ள காகிதம்’ என்று பொருள். பேச்சு வழக்கில் கடிதம் என்பது ‘கடுதாசி’ என்று வழங்கப்படுகிறது. இலக்கிய வழக்கில் ஓலை, மடல், முடங்கல், பத்திரம், திருமுகம் என்ற சொற்களால் வழங்கப்படுகின்றது.

பனை, தென்னை முதலியவற்றின் ஓலைகளில் எழுதியனுப்பியதால் அதனை ‘ஓலை’ என்றும் ‘மடல்’ என்றும் கூறினர். எழுதியதை முடக்கி (மடக்கி ) அனுப்பியதால் ‘முடங்கல்’ என்றனர். இலைகளில் எழுதியதால் ‘பத்திரம்’ என்றனர். அரசன், இறைவன், திருத்தொண்டர்கள், ஆசான், அமைச்சர் போன்றோர் எழுதியதைத் திருமுகம் என்றனர்.

சிலப்பதிகாரத்தில் மாதவி கோவலனுக்குத் தாழை மடலில் கடிதம் எழுதியதை நாம் இங்கு நினைவில் கொள்ளலாம். ஒப்பனைக்கலை வாயிலாகக் கடிதத் தொடர்பு கொண்டதைப் பெருங்கதை என்ற நூலின் வாயிலாக அறிய முடிகின்றது. திருவாலவுடையார் சேரமான் பெருமான் நாயனாருக்கு எழுதிய திருமுகம் பற்றி பெரியபுராணத்திலும் பதினோராம் திருமுறையிலும் காணப்படுகின்றது. தில்லைச்சிற்றம்பலவன் உமாபதிசிவத்துக்கு பெற்றான் சாம்பான் பொருட்டு எழுதிய சீட்டுக்கவியும் ஆழ்வார் நாயன்மார் பாடிய விண்ணப்பப் பாக்களும் கடிதத் தொடர்பையே காட்டி நிற்கின்றன.

மார்க்ஸிம் கார்க்கி, நேரு, அண்ணா, கலைஞர் போன்றோரின் கடிதங்கள் குறிப்பிடத்தக்கன. பெட்ரண்ட் ரஸ்ஸல், தாகூர் போன்றோரின் கடிதங்கள் உலகப் புகழ் பெற்றவை. மு. வ. எண்ணற்ற வாழ்வியல் கடிதங்களை எழுதியுள்ளார். இராமலிங்க அடிகளார், கவியோகி சுத்தானந்த பாரதியார் போன்றோர் எழுதிய கடிதங்களும் இங்கு நினைவு கூறத்தக்கன.

10. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றனுக்கு விடுபட்ட இடங்களைப் பூர்த்தி செய்க. **3x1=3**

(I) கடிதம் என்ற சொல்லுக்கு __________ என்று பொருள்.

(II) எழுதியதை முடக்கி எழுதியதால் __________ என்றனர்.

(III) பேச்சு வழக்கில் கடிதம் என்பது __________ என்று வழங்கப்படுகிறது.

(IV) அமைச்சர் போன்றோர் எழுதியதை __________ என்றனர்.



Unnati Educations
9899436384, 9654279279

11. எவையேனும் மூன்றனுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுக. 3x1=3

(I) சிலப்பதிகாரத்தில் மாதவி கோவலனுக்கு எதில் கடிதம் எழுதினாள் ?

(அ) ஓலை (ஆ) தாழை (இ) பத்திரம் (ஈ) கடிதம்

(II) விண்ணப்பப் பாக்கள் :

(அ) ஆழ்வார் (ஆ) கோவலன் (இ) கலைஞர் (ஈ) அரசர்

(III) ஒப்பனைக்கலை கடிதத் தொடர்பைக் கூறுவது :

(அ) சிலப்பதிகாரம் (ஆ) தொல்காப்பியம்

(இ) பெருங்கதை (ஈ) பெரியபுராணம்

(IV) இலைகளில் எழுதியதால் __________ .

(அ) பத்திரம் (ஆ) மடல் (இ) கடிதம் (ஈ) கடுதாசி

**பின்வரும் பத்தியைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி (வினா எண் 12) :**

தகவல் தொழில் நுட்பம், மனிதர்கள் ஒருவருக்கு ஒருவர் தகவல் பரிமாறிக்கொள்ள உதவுகிறது. இன்று, இத்துறை கற்பனை செய்து பார்க்கமுடியாத அளவு வளர்ச்சிப் பெற்றுவிட்டது. மொழி கண்டுபிடிக்கப்படுவதற்கு முன் செய்கைகள் மூலம் அதாவது உடல் மொழி மூலம் தகவல் தொடர்பு நிகழ்ந்தது.

மொழி அறிமுகமான பிறகு பேச்சு மூலம் அப்போதுகூட தூரத்தில் இருப்பவர்களுக்குத் தகவல் தெரிவிப்பது சிரமமாக இருந்தது. மரங்களின் மீதிருந்து கூவிக் குரல் எழுப்பிப் பக்கத்து ஊர்காரர்களுக்குக் குறிப்பிட்ட செய்தியை அனுப்பினார்கள். முரசுகளை ஒரு குறிப்பிட்ட ஒலி எழுப்பும்படி அதிரச்செய்து இன்ன ஒலி எழுப்பினால் அதற்கு இன்னதுதான் அர்த்தம் என்று நிர்ணயித்துத் தகவல்களைப் பரிமாறிக்கொண்டார்கள்.

தற்பொழுது, ஊடகங்கள் மூலம்தான் பெரும் திரளான மக்களுக்குத் தகவல்கள் போய்ச் சேருகின்றன. எனவே, இவற்றுக்கு ‘மாஸ் மீடியா’ என்று பெயர். ஊடகங்கள் பலவகையானவை. வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள், வார, மாதமிருமுறை பத்திரிக்கைகள், விளம்பரங்கள், வீடியோவிளையாட்டுகள், குறுந்தகடுகள் இப்படி ஊடக வடிவங்கள் இன்று ஏராளமாகப் பெருகிவிட்டன.

தகவல் தொழில்நுட்பம் மூலமாக இவையனைத்தும் பெருந்திரளான மக்களைச் சென்று சேருவதால் இவற்றுக்கு மக்கள் தொடர்பியல் என்றும் சொல்வதுண்டு. இன்று, நாம் வாழ்கிற உலகில் இத்தகைய பெருந்திரள் ஊடகங்கள், தகவல் தொடர்பு சாதனங்கள் இல்லாத அன்றாட வாழ்க்கை ஒன்றைக்கூடச் செய்து பார்க்கமுடியாது ! பல நடுத்தரக் குடும்பங்களில் காலையில் மக்கள் எழுந்த உடனேயே வானொலியை இயக்கி ஒலிவடிவில் தகவல்களைப் பெறுவது, பாடல்களை, உரையாடல்களைக் கேட்பது தினசரி நடைமுறையாகிவிட்டது. தொலைக்காட்சிகளை இயக்கி, பல்வேறு அலைவரிசைகளில் செய்திகள், திரைப்படங்கள், நெடுந்தொடர்கள் பாடல் காட்சிகள் ஆகியவற்றை ஒலி, ஒளி இரண்டும் இணைந்து வரும் ‘காட்சி ஊடக’ வடிவில் கண்டு, கேட்டுச் சுவைப்பதும் தினசரி நிகழ்வு. காலையில் கண்விழித்ததுமே வீட்டுவாயிலில் கிடக்கும் செய்தித்தாள்கள் வார-மாத-மாதமிருமுறைப் பத்திரிக்கைகளை எடுத்து வைத்துப் படிப்பதும் அன்றாட வாழ்க்கையின் முதல் செயல்பாடாகிவிட்டது. இவற்றை ‘அச்சு ஊடகம்’ என்கிறோம்.

ஒரு காலத்தில் மிக வசதியானவர்களின் வீடுகளில் மட்டுமே இருந்த தொலைபேசி, கணினி வசதி இன்றைய உலகமயமாக்கல் சூழலில் சாதாரண மக்கள் அனைவரும் பயன்படுத்துகிற தகவல் தொடர்புச் சாதனங்களாகிவிட்டன.



Unnati Educations
9899436384, 9654279279

12. பின்வருவனவற்றுள் எவையேனும் ஐந்தனுக்குச் சரியா, தவறா எனக் கண்டறிக. **1x5=5**

(I) ஆரம்பநாட்களில் சைகைகள் மூலம் தகவல்தொடர்பு நிகழ்ந்தது.

(II) வானொலி என்பது காட்சி ஊடகமாகும்.

(III) மாஸ் மீடியா என்பது ஊடகங்களின் பெயர்.

(IV) செய்தித்தாள்கள் என்பது அச்சு ஊடகமாகும்.

(V) பண்டைய மக்கள் கூவிக் கூட செய்தியை அனுப்பினார்கள்.

(VI) எந்த இடத்தில் ஒருவர் இருந்தாலும் அவரிடம் நினைத்தமாத்திரத்தில் தொலைக்காட்சியின் மூலம் தொடர்புகொள்ள முடியும்.

(VII) வானொலி என்பது ஊடகத்தின் ஒரு வகை.

13. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(I) உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வது : **1x1=1**

(அ) அலுவலக மேலாண்மை (ஆ) சந்தை மேலாண்மை

(இ) தொழில் நுட்ப மேலாண்மை (ஈ) நிதி மேலாண்மை

(II) மனிதவள மேலாண்மை என்பது :

(அ) நபர்கள் நிர்வாகம் (ஆ) அலுவலக நிர்வாகம்

(இ) ஆவணங்கள் பராமரிப்பு (ஈ) கருவிகள் பராமரிப்பு

## பிரிவு - இ : இலக்கணம்

14. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு வேற்றுமைத்தொகை குறிப்பு எழுதுக. **1x1=1**

(I) நிலங்கடந்தவன் -

(II) சாந்தன் கை -

15. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றனை அவை எம்மொழிச் சொற்கள் என்பதைக் கண்டறிந்து எழுதுக. **1x3=3**

(I) தயார் -

(II) கெடுபிடி -

(III) அமிழ்தம் -

(IV) இலாகா -

16. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டு கணினிச் சொற்களுக்குத் தமிழில் கலைச் சொற்களை எழுதுக. **1x2=2**

(I) Compact Disc -

(II) Technology -

(III) Visual Media -



Unnati Educations
9899436384, 9654279279

17. பின்வரும் வாக்கியங்களில் எவையேனும் இரண்டனுக்கு அவை பயின்றுவரும் அணியினை விளக்குக. **1x2=2**

(I) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின் (திருக்குறள்)

(II) புலி பாய்ச்சல்

(III) மதிமுகம்

(IV) போருழந்து எடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரல் என்பன போல் மறித்துக் கைகாட்ட (சிலம்பு)

18. பின்வரும் வினாக்களுக்கு ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. **1x1=1**

(I) உடம்படுமெய் என்றால் என்ன ?

(II) பின்வரும் சொற்களில் உடம்படுமெய் சொல்லைக் கண்டறிக.

(அ) அலைகடல் (ஆ) கோவில்

(இ) மதிமுகம் (ஈ) வெண்ணிலா

## பிரிவு - ஈ

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும் (வினா எண் 19 - 20)**

ஐராவதம் என்னும் தேவருலக யானை இத்தலத்தில் ஈசனைப் பூசித்துச் சிவப்பேறு அடைந்ததாம். அதனால் இத்திருக்கோயில் ஐராவதீஸ்வரம் என்று பெயர் பெற்றதாகத் தாராசுர மான்மியம் என்னும் நூல் குறிப்பிடுகின்றது. தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கும்பகோணத்துக்குத் தென் மேற்கில், அரலாற்றின் தென்கரையில் அமைந்துள்ளது தாராசுரம்.

சோழப்பேரரசர்கள் காலத்தில் இராசபுரம் என்று அழைக்கப்பெற்ற இவ்வூர் காலப்போக்கில் இராராபுரம் என்றும் தாராபுரம் என்றும் மருவி தற்காலத்தில் தாராசுரம் என்று அழைக்கப்பெறுகின்றது. இரண்டாம் குலோத்துங்கனின் மகனாகிய இரண்டாம் இராசராசச் சோழன் தோற்றுவித்த இத்திருக்கோயில்தான் புராண அடிப்படையில் ஐராவதீஸ்வரர் திருக்கோயில் என்று அழைக்கப்பெறுகின்றது. இத்திருக்கோயிலுக்குத்தான் அண்மையில் யுனெஸ்கோ நிறுவனம் உலக மரபுச்சின்னம் என்ற தகுதியை அளித்தது.

தற்போதைய ஐராவதீஸ்வரர் ஆலயம் மூன்று நிலைகளோடு உள்ளது. கோபுரம் வாயிலோடும் திருமதில், திருச்சுற்று மாளிகை உள்ளன. தஞ்சை பெரியகோயிலின் விமானத்தை ஒத்த விமானமும் உள்ளது. கோபுர வாயிலுக்கு வெளியே மிகுந்த கலை வேலைப்பாடுகளுடன் அமைந்த உயர்ந்த பலிபீடம், அதனுடன் இணைந்த கணபதியார் கோயில், நந்தி மண்டபம், ரிஷபக்கொட்டில் ஆகியவை உள்ளன.



Unnati Educations
9899436384, 9654279279

**19.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **1x3=3**

(I) ஐராவதம் என்னும் தேவருலக யானை யாரைப் பூசித்துச் சிவப்பேறு அடைந்தது ?

(அ) முருகன் (ஆ) பெருமாள் (இ) சிவன் (ஈ) கணபதி

(II) தாராசுரம் எம்மாவட்டத்தில் அமைந்துள்ளது ?

(அ) தஞ்சாவூர் (ஆ) சென்னை

(இ) கும்பகோணம் (ஈ) திருநெல்வேலி

(III) ஐராவதீஸ்வரர் திருக்கோயிலைத் தோற்றுவித்தவர் யார் ?

(அ) குலோத்துங்கன் (ஆ) இரண்டாம் இராசராசச் சோழன்

(இ) கரிகாலன் (ஈ) இரண்டாம் குலோத்துங்கன்

**20.** பின்வரும் வினாக்களுக்கு ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்கவும். **1x1=1**

(I) உலக மரபுச்சின்னமாக ஐராவதீஸ்வரத்தை அங்கீகரித்த நிறுவனம் __________.

(II) அரலாற்றின் தென்கரையில் அமைந்துள்ளது __________.

**21.** பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கனுக்குச் சரியா, தவறா எனக் கண்டறிக. **1x4=4**

(I) வ.உ. சிதம்பரனார் 1872-ஆம் ஆண்டு பிறந்தார்.

(II) வ.உ. சிதம்பரனாரின் மனைவி பெயர் முத்தம்மாள்.

(III) வ.உ. சிதம்பரனார் விவசாயம், நெசவு தொழில்களில் கவனம் செலுத்தினார்.

(IV) வ.உ. சிதம்பரனாருடன் தேசபக்தர் சுப்பிரமணிய சிவாவும் கைது செய்யப்பட்டார்.

(V) 50 ஆண்டுகள் ஆயுள் தண்டணைக்கு உட்பட்டார் வ.உ. சிதம்பரனார்.

(VI) 1913-ஆம் ஆண்டு விடுதலை அடைந்தார் வ.உ.சி.

(VII) வ.உ. சிதம்பரனார் உரைநடை, செய்யுள் உள்ளிட்ட பல நூல்களை இயற்றியுள்ளார்.

**22.** பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டனுக்கு விடுபட்ட இடங்களை நிரப்புக. **1x2=2**

(I) __________ அறிந்து செயல்பட்டால் ஒருவரின் செல்வம் நிலைக்கும் என திருவள்ளுவர் கூறுகிறார்.

(II) நாலும் இரண்டும் __________ உறுதி.

(III) சதகம் __________ பாடல்கள் கொண்டது.

(IV) மூன்று தமிழையும் ஓதியவர் __________.

**பகுதி - ஆ பிரிவு - அ**

**(செய்யுள் 5 மதிப்பெண் + உரைநடை 6 மதிப்பெண் = 11 மதிப்பெண்)**

**23.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு 20 முதல் 25 சொற்களில் விடையளிக்கவும். **1x2=2**

(I) யார் கிடப்பது கண்டு தாயின் புத்தி தடுமாறுகிறது ?

(II) நிலைகெட்ட மனிதர் எவைகளைக் கண்டு அஞ்சுகின்றனர் ?



Unnati Educations
9899436384, 9654279279

**24.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு **40** முதல் **45** சொற்களில் விடையளிக்கவும். **1x3=3**

(I) 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற பாடலின் வழி நீ அறிந்தவையைத் தொகுத்துரைக்க.

(II) பாவை நோன்பு நோற்கும்போது செய்யவேண்டிய நற்செயல்கள் யாவை ?

**25.** பின்வரும் வினாக்களுக்கு 25 முதல் 30 சொற்களில் விடையளிக்கவும். **1x2=2**

சிற்றிலக்கியங்கள் - சிறு குறிப்புத் தருக.

**26.** (I) தமிழகத்துக் கிராமியக் கலைகளுள் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக. **1x2=2**

**அல்லது**

(II) ஏறுதழுவுதல் என்றால் என்ன ?

**27.** (I) ஆயக்கலைகள் எத்தனை ? **1x2=2**

**அல்லது**

(II) ஆடற்கலையை வளர்த்தெடுத்த மும்மூர்த்திகள் யார் ?

**பிரிவு - ஆ**

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும் (வினா எண் 28 - 29)**

மேலாண்மை என்பது ஒரு நிறுவனத்தை அல்லது அமைப்பை நிர்வகிப்பதாகும். திட்டமிடுதல், நிறுவனத்தை உருவாக்குதல், பணிசெய்தல், தலைமைத் தாங்கி வழிநடத்துதல் என்பதனை உள்ளடக்கியதுதான் மேலாண்மை.

எந்த நிறுவனத்திற்கும் அமைப்பிற்கும் முறையான மேலாண்மை அவசியமாகிறது. ஒழுக்க நெறியுடன் கட்டுக்கோப்பாக முறையாக நிறுவனத்தை வழிநடத்துவதற்கு மேலாண்மை அவசியமாகிறது.

மேலாண்மை வரையறை

நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் குடும்ப அமைப்பை நிர்வகிப்பதிலும் மேலாண்மை என்னும் பண்பு ஊடுருவி நிற்கிறது. சில குறிப்பிட்ட முடிவுகளை எடுத்து அவற்றைச் செயல்படுத்தக் கடைபிடிக்கும் வழிமுறைகளே மேலாண்மை என்பதாகும்.

மேலாண்மை என்பது மற்றவர்களைக் கொண்டு குறிப்பிட்ட பணிகளைச் செய்து முடிக்கும் கலை. இது, மேலாளர்கள் பல அடங்கிய குழுவைக் குறிப்பது. மேலாண்மை அலுவல் பணிகளை நாம் பின்வரும் பகுதிகளாக வகுத்துக்கொள்ளலாம்.

**1.** திட்டமிடுதல் **2.** அமைத்தல் **3.** பணியாளர்களை நியமித்தல்
**4.** நெறிப்படுத்துதல் (இயக்குவித்தல்) **5.** கட்டுப்படுத்துதல்

திட்டமிடுதல்

திட்டமிடுதல் என்பது எண்ணத்தின் செயல்முறை ஆகும். இதற்குத் தெளிந்த புலங்களின் அறிவாற்றல், முன்னதாக அறியும் தொலைநோக்குப் பார்வை, மிக வலுவாக, தீர்க்கமாக ஆராய்ந்துத் தேரும் முடிவு ஆகியவற்றைப் பயன்படுத்திச் செயல்பட வேண்டி இருக்கும். நாம் விரும்பும் விளைவையும் பயனையும் எய்துவதற்குச் செயல்படவேண்டிய வழிமுறையைத் தீர்மானித்தலே திட்டமிடுதல் ஆகும்.



Unnati Educations
9899436384, 9654279279

திட்டமிடுதல் பணியில் கீழ்க்காணும் படிநிலைகள் அடங்கும்.

1. நிறுவனத்தின் குறிக்கோள்கள் அல்லது இலக்குகளைத் தீர்மானித்தல்
2. நிகழவிருப்பதை முன்கூட்டி அறிவித்தல்
3. மாற்று நடவடிக்கை வழிமுறைகளைத் தேடியறிதல்
4. பல்வேறு வழிமுறைகளை மதிப்பீட்டறிந்து திட்டம் ஒன்றை வகுத்தல்
5. கொள்கைகள் மற்றும் செயல்முறைகளை வகுத்தல்
6. விவர அட்டவணைகள், பணித்திட்டங்கள், வரவு செலவுத் திட்டங்களை வகுத்தல்.

**28.** மேலாண்மை அலுவல் பணிகளை எவ்வாறு வகுக்கலாம் ? **2**

**29.** (I) மேலாண்மை என்றால் என்ன ? **2**

**அல்லது**

(II) திட்டமிடுதல் என்றால் என்ன ?

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்கவும் (வினா எண் 30 - 32)**

மேலாண்மை என்ற வார்த்தைக்கான விளக்கம் நிர்வாகம் செய்வதாகும். ஒரு நிறுவனம், அமைப்பு, அலுவலகம், துறை போன்றவற்றை நிர்வகிப்பதுதான் மேலாண்மை எனப்படுகிறது.

மேலாண்மை வகைகள் விளக்கம்:

மேலாண்மையியலில் பல வகைகள் உள்ளன. ஒவ்வொரு நிறுவனம், துறை, அமைப்புப் போன்றவற்றுக்கு ஏற்ப மேலாண்மை வகை மாறுபடும். நிறுவன மேலாண்மை, அலுவலக மேலாண்மை, மனிதவள மேலாண்மை, உற்பத்தி மேலாண்மை, சந்தை மேலாண்மை, நிதி மேலாண்மை, தொழில்நுட்ப மேலாண்மை ஆராய்ச்சி மேம்பாட்டு மேலாண்மை போன்றவை மேலாண்மை வகைகளில் முக்கியமானவை. இவை, ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திலோ அல்லது ஒரு நிறுவனத்தின் பிரிவுகளிலோ நடைமுறைப்படுத்தப்படுகின்றன. வளர்ந்து வரும் மேலாண்மை நுட்பங்களுக்கும் பொருளாதார சூழ்நிலைகளுக்கும் நிறுவனத்தின் தேவைக்கு ஏற்பவும் புதிய வகை மேலாண்மை வகைகள் உருவாகின்றன.

நிறுவன மேலாண்மை :

நிறுவன மேலாண்மை என்பது ஒரு நிறுவனத்தின் ஒட்டுமொத்த நிர்வாகத்தைக் குறிப்பதாகும். இதைப் பொது மேலாண்மை என்றும் அழைக்கின்றனர். ஒரு அமைப்பின் துறையின் நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுகளையும் ஒட்டுமொத்தமாகக் கொண்டு, அனைத்துப் பணிகளையும் நிர்வாகம் செய்வது நிறுவன மேலாண்மை எனப்படுகிறது. இந்தப் பொது நிர்வாகத்தைத் தேர்ந்தெடுப்பவர் அல்லது நியமிக்கப்படுபவர் கண்டிப்பாக அனைத்துத் துறைகளையும் பற்றித் தெரிந்திருக்க வேண்டும்.

அலுவலக மேலாண்மை :

எந்தவொரு நிறுவனத்திலும் அமைப்பிலும் அலுவலகம் முக்கியமான இடத்தைப் பிடிக்கிறது. ஒரு நல்ல திறமையான அலுவலகம் இல்லாமல் எந்த நிர்வாகமும் நன்றாகச் செயல்பட முடியாது. நிறுவனங்கள் மற்றும் துறைகளுக்கு அலுவலகம் ஒரு மையமாக இயங்கி வருகிறது. ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் அனைத்துப் பணிகளும் செவ்வனே நடைபெற இந்த அலுவலகங்கள் முக்கியப் பங்காற்றி வருகின்றன.



Unnati Educations
9899436384, 9654279279

நிறுவனத்திற்கு வரும் கடிதங்களைப் பெறுவது, அதன் விவரங்களைத் தொகுப்பது, அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான வேலையை நிர்ணயிப்பது, ஊழியர்கள் வருகை, வேலை நேரம் போன்றவற்றைப் பராமரிப்பது, வெளியே போகவேண்டிய கடிதங்களை அனுப்புவது, வரவு செலவுகளைப் பேணுவது, அவற்றை முறையாகப் பதிவுசெய்வது, நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் ஆவணங்களாக மாற்றுவது போன்ற எல்லாப் பணிகளையும் அலுவலகமே செய்கிறது.

மனிதவள மேலாண்மை

மனிதவள மேலாண்மை என்பது ஒரு நிறுவனத்தில் பணிபுரியும் நபர்களை நிர்வாகம் செய்வதாகும். மற்ற நிர்வாகங்களைக் காட்டிலும் இந்த நிர்வாகம் மிகவும் சிக்கலானது. காரணம், மற்ற நிர்வாகங்கள் பொருட்கள், கருவிகள், நிதி போன்றவற்றுடன் தொடர்புடையது. ஆனால், இந்த நிர்வாகம் முற்றிலும் மனிதர்கள் சம்பந்தப்பட்டது. மனிதர்களை நிர்வகிப்பது மிகவும் முக்கியமான, கவனமாகச் செயல்படக்கூடிய ஒன்றாகும். ஏனென்றால், இது மனிதர்களின் மனம் தொடர்பானதாகும்.

**30.** (I) அலுவலக மேலாண்மையில் அலுவலகத்தின் முக்கியப் பணிகளை விளக்குக. **2**

**அல்லது**

(II) நிறுவன மேலாண்மை என்றால் என்ன ?

**31.** மேலாண்மை வகைகள் குறித்து எழுதுக. **2**

**32.** மனிதவள மேலாண்மை நிர்வாகம் சிக்கலானது. ஏன் ? **2**

**33.** தமிழ்மொழியின் தனித்தன்மை பற்றி உரைக்க. **3**

## பிரிவு - இ

**34.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **1x2=2**

(I) ஒவ்வொரு நிறுவனத்தின் உயிர்நாடி __________.

(அ) விளம்பரத் துறை (ஆ) விற்பனைத் துறை
(இ) உற்பத்தித் துறை (ஈ) நிதித் துறை

(II) ஒரு நிறுவனத்தின் ஒட்டுமொத்த நிர்வாகத்தைக் குறிப்பது :

(அ) அலுவலக மேலாண்மை (ஆ) நிறுவன மேலாண்மை
(இ) நிதி மேலாண்மை (ஈ) சந்தை மேலாண்மை

**35.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **1x2=2**

(I) தினம் என்பது __________ மொழிச்சொல்.

(அ) பாரசீகம் (ஆ) தமிழ் (இ) வடமொழி (ஈ) அரபு

(II) தணிக்கை என்பது __________ மொழிச்சொல்.

(அ) வடமொழி (ஆ) தமிழ் (இ) அரபு (ஈ) உருது

**36.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. **1x2=2**

(I) தற்குறிப்பேற்ற அணி என்றால் என்ன ?

(II) எடுத்துக்காட்டு உவமை அணி என்றால் என்ன ?



Unnati Educations
9899436384, 9654279279

## பிரிவு - ஈ

**37.** பின்வரும் வினாவிற்கு விளக்கமாக விடையளிக்கவும். **1x3=3**
நாலடியார் என்னும் நூல் பண்பாளர்கள் எவ்வாறு நடந்துகொள்வர் எனக் கூறுகிறது.

**38.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. **1x2=2**
(I) தொலைதூரக் கல்வியில் சேர்வதற்கான விண்ணப்பக் கடிதம் ஒன்று எழுதுக.
(II) அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு விண்ணப்பம் அனுப்பி வைக்குமாறு கடிதம் எழுதுக.

**39.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. **1x5=5**
(I) 'கனியிடை ஏறிய சுளையும்-முற்றல்...' என்ற பாடலில் தமிழின் இனிமைக் குறித்து பாரதிதாசன் கூறும் கருத்துக்களை எழுதுக.
(II) 'கத்தியின்றி ரத்தமின்றி' என்ற பாடலின் கருத்தினை விளக்குக.

## பகுதி - இ - பிரிவு - உ

**40.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடுபட்ட இடத்தைப் பூர்த்தி செய்க. **1x2=2**
(I) பின்னங்கள் __________ எனப்படும்.
(II) சிறுகட்டிகளின்றி உழவு செய்ததை __________ என்றனர்.
(III) மணற்பாங்கான இடத்தில் கட்டப்பட்ட அணை __________

**41.** (I) கீழ்வருவனவற்றுள் எது மேலாண்மைத் தகவல் தொடர்பில் மூன்று முக்கியக் கூறுகளுள் ஒன்றாகும் ? **1x1=1**
(அ) ஊடகம் (ஆ) தகவல் தொழில்நுட்பம்
(இ) உடல் அசைவு (ஈ) பதில் தொடர்பு
(II) எதை வைத்து ஒரு நிறுவனத்தின் வளர்ச்சி நிர்ணயிக்கப்படுகிறது ?
(அ) உற்பத்தி (ஆ) மனிதவளம்
(இ) பணம் (ஈ) திறமையான ஊழியர்கள்

**42.** பின்வருவனவற்றுள் சரியான விடையைக் கண்டறிக. **1x2=2**
(I) பாரதிதாசன் பிறந்த இடம் __________.
(அ) சென்னை (ஆ) புதுச்சேரி (இ) மதுரை (ஈ) எட்டயபுரம்
(II) தமிழ்விடு தூது யார் மீது பாடப்பட்டது ?
(அ) பெருமாள் (ஆ) சிவபெருமான் (இ) முருகன் (ஈ) விநாயகர்

**43.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு **20** முதல் **25** சொற்களுக்குள் விடையளிக்க. **1x2=2**
(I) சிலப்பதிகாரம் பற்றி நீவிர் அறிவன யாவை ?
(II) கண்ணகியின் வழக்காடு திறத்தைப் புலப்படுத்துக.

**44.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. **1x4=4**
(I) பதினெண் மேற்கணக்கு நூல்கள் குறித்து எழுதுக.
(II) தமிழ்விடு தூது உரைக்கும் சிறப்புகளை எடுத்துரைக்க.

**45.** கண்ணகியின் தோற்றம் பற்றி வாயிற்காவலன், பாண்டியனிடம் கூறியவற்றை விவரிக்க. **1x4=4**

- o O o -



Unnati Educations
9899436384, 9654279279